Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals — since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2017-2018

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Nov.17 : 1072 Nos.
  - Up to Oct.17 : 1067 Nos.
- **Performance Nov. 17 …**
  - Turnover growth : 22.66%
  - Employment growth : -0.69%
  - 100% Attendance : 8.39%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® Innovation In Inert Metals – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil Results for environment – Water Treatment Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

Tiaano Vidyashram – Tiaano Vidyashram (CBSE Curriculum)




## அலுவலக உறவு நிர்வாகம்

அலுவலகம் என்பது நமது சொந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய தளமல்ல என்பதை நினைவில் கொள்ளவும்.

அலுவலகத்தில் உறவு என்பது, நாம் ஏற்றுக் கொண்ட பணிக்கும் நமக்கும் இடையே இருப்பது தான். வேறு உறவுகள் அங்கே நாடாதிருப்பதே நன்று.

அலுவலகத்தில் நமக்கும் வேறொருவருக்கும் இடையே ஒரே விதமான மன இடைவெளி இருக்க வேண்டும். அது மற்றவர்க்குப் புலனாகும் படி நமது நடத்தை இருக்க வேண்டும். இப்படிப் பழகுகின்ற எளிய ஊழியர், நிர்வாகியாகும் வாய்ப்பு இருக்கிறது. இப்படிப் பழகுகின்ற நிர்வாகி, எளிய ஊழியர்களின் நம்பிக்கையைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

அலுவலகத்தில், யார் சரி, யார் தவறு என்பதைக் காட்டிலும், எது சரி, எது தவறு என்னும் போக்கே அனைவருக்கும் நலம் சேர்க்கும்.

அலுவலகத்தில் எவரோடும் தனிப்பட்ட முறையில் நட்போடு இருக்க வேண்டும். ஆனால் எந்தப்பிரச்சினையையும் சொந்த விருப்பு வெறுப்பின்றி எதிர் கொள்ள வேண்டும். You must have a personal rapport with everyone but you must deal with issues only impersonally.

அலுவலகத்தில், ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய ஒரே உணர்ச்சி குழு மனப்பான்மை. அதாவது Team Spirit.

இந்த குழு மனப்பான்மை தான் குடிமை உணர்வுக்கு (Spirit of citizenship) ஆதாரம்.

இந்த குழு மனப்பான்மை தான் இன்றைய சமுதாயத்தின் பிடரியைக் கவ்விக் கொண்டிருக்கும் பற்பல பிணிகளுக்கும் தீர்வாகும்.

– Mr. V.P.Jeyakumar
Managing Director.

## FUNCTIONAL WISHES




Happy New Year
$1^{st}$ January

Happy Pongal
$15^{th}$ January






Happy
Republic day
$26^{th}$ January

## BIRTHDAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.



| | |
|---|---|
| Mr. Samuel. S. Sekhar<br>*Vice President - Marketing* | $4^{th}$ Jan. |
| Mr. Manivannan.G<br>*Coating* | $4^{th}$ Jan. |
| Mr. Mohanakumar.G.S<br>*Production* | $4^{th}$ Jan. |
| Mr. Saravanan.K<br>*Finance* | $6^{th}$ Jan. |
| Mrs. Sasirekha.S<br>*Marketing* | $19^{th}$ Jan. |
| Mr. Nagarajan.M<br>*Production* | $20^{th}$ Jan. |
| Mrs. Yagavalli.S<br>*Human Resource* | $20^{th}$ Jan. |
| Mr. Karunakaran.S<br>*Coating* | $20^{th}$ Jan. |
| Mr. Murugesan.G<br>*Production* | $20^{th}$ Jan. |
| Mrs.Vanajambika Jeyakumar<br>Director Technical | $27^{th}$ Jan. |

**Best Wishes from Tiaano Employees**

A Fool Can become a genius when he understands he is a fool. But;

A genius can become a fool when he understands he is a genius.

- Dr. A.P.J. Abdulkalam

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

அந்தச் சிறுவன் நடந்து போய்க் கொண்டிருந்த போது சாலையில் நூறு ரூபாய் நோட்டு கிடப்பதைப் பார்த்தான். அன்று முதல் ஏதும் தரையில் கிடக்கிறதா என்று பூமியைப் பார்த்துக் கொண்டே நடந்தான். அடுத்த அறுபது வருடங்கள் அப்படியே இருந்தான்.

அவனுக்கு கிடைத்தவை 768 ரூபாய், 2 மோதிரங்கள், 3 கொலுசுகள். ஆனால் அவன் இழந்திருந்தவை, 21900 சூர்யோதயங்கள், 630 வானவில் காட்சிகள். ஆயிரக்கணக்கான பூக்கள், பல்லாயிரம் குழந்தைகளின் புன்னகை முகங்கள்.

வாழ்க்கையைத் தொலைத்தவன் மீட்பதற்கு வாய்ப்பே இல்லை. அதிர்ஷ்டம் காலை இடறினால் மட்டும் குனிந்து பாருங்கள். இல்லையென்றால் வாழ்க்கையைப் பாருங்கள். வாழ்ந்து பாருங்கள்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

### Value

A popular speaker started off a seminar by holding up a $20 bill. A crowd of 200 had gathered to hear him speak. He asked, “who would like this $20 bill?” 200 hands went up.

He said, “I am going to give this $20 to one of you but first, let me do this”. He crumbled the bill up. He then asked, “who still wants it?”

All 200 hands were still raised. “well”, he replied, “what if I do this?” Then he dropped the bill on the ground and stomped on it with his shoes.

He picked it up, and showed it to the crowd. The bill was all crumpled and dirty. “Now who still wants it?” All the hands still went up.

“My friends, I have a just showed a very important lesson. No matter what I did to the money, you still wanted it because it did not decrease in value. It was still worth $20. Many times in our lives, life crumples us and grinds us into the dirt. We make bad decisions or deal with poor circumstances. We feel worthless. But no matter what has happened or what will happen, you will never lose your value. You are special – Don’t ever forget it!

Compiled by: K. Shahjadhee Begum
Marketing.

### மௌன மொழி

ஒரு சமயம் வினோபாஜியை சில பத்திரிக்கை நிருபர்கள் பேட்டி எடுக்கச் சென்றனர். வினோபாஜீக்கு பல மொழிகள் தெரியும் அதை அறிந்த ஒரு நிருபர் அவரிடம் தங்களை எந்த மொழியில் பேட்டி காணலாம் ? என்று கேட்டார். எந்த மொழியில் வேண்டுமானாலும் என்றார் வினோபாஜீ.

தங்களுக்கு எந்த மொழியில் பதில் சொல்ல விருப்பமாக இருக்கிறது? என்று மீண்டும் கேட்டார் அந்த நிருபர்.

நிருபர் தன்னுடைய நேரத்தை வீணாக்குகிறார் என்றுணர்ந்த வினோபாஜீ எரிச்சலுற்றார். அவர் அந்த நிருபரைப் பார்த்து, எனக்கு பிடித்த மொழி மௌனம்! என்று கூறிவிட்டு எழுந்து சென்றார்.

– திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## தெரிந்து கொள்வோம்

### Health Benefits of Raisins

Raisins, also known as "Little germs" have great medicinal values. It can be consumed raw or used in cooking. It contains fructose, glucose, protein, fibre, vitamins, minerals and high anti–oxidants. It is a great supplement to relief from constipation, anemia, fever and more…

- Helps in digestion and relieves constipation.
- Reduce acidity & blood Pressure.
- Fight against anaemia.
- Prevents colon cancer.
- Keeps your eyesight strong.
- Helps to gain weight in a healthy way.
- Modulates sugar absorption in diabetics.
- Prevents tooth decay, cavities and teeth brittleness, thereby promoting strong teeth.
- Maintain healthy and glowing skin.
- Arrests the formation of kidney stones.

*Collected From Internet*

### முள்ளங்கியின் மருத்துவ குணங்கள்:

- முள்ளங்கியானது தொண்டை சம்மந்தமான நோய்களை குணப்படுத்துவதோடு குரலை இனிமையாக மாற்றுகிறது.
- முள்ளங்கி பசியைத் தூண்டுகிறது.
- மேலும் சீறுநீரக கற்களை இவை கரையச் செய்கின்றன.
- முள்ளங்கி முடி உதிர்தலை குணப்படுத்த வல்லது.
- முள்ளங்கி சூப் நரம்பு சுருள்களை நீக்கும்.
- அதிக நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றுள்ள முள்ளங்கியானது உடலுக்கு தேவையான வைட்டமின் சத்துகளும் தாது உப்புகளும் பெற்றுள்ளன.

*Collected From Internet.*

### உலகில் சிறந்த வெற்றியாளரான ஜாக்மாவின் வெற்றிக்கான சில வழிகள்

**ஜாக்மா (Jackma) :**

Jack Ma is the founder and executives chairman of **Aliba Group**. Chinese business magnate and Philanthropist.

சீனாவின் மிகப் பெரிய பணக்காரர் ஆவதற்கு முன்பு அதிக தோல்விகளையும் புறக்கணிப்புகளையும் சந்தித்தவர் அலிபாபா நிறுவனர் ஜாக்மா.

பள்ளி தேர்வில் பல தோல்விகளை கண்டவர். கல்லூரி நுழைவுத் தேர்வில் கணிதத்தில் 120 மதிப்பெண்ணுக்கு 1 மதிப்பெண் மட்டுமே பெற்றவர். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தால் 10 முறை நிராகரிக்கப்பட்டவர். 30 வெவ்வேறு வேலைகளுக்கு விண்ணப்பித்து அனைத்திலும் தோல்வியை அடைந்தவர். KFC –யில் வேலைக்கு விண்ணப்பித்த 24 பேரில் ஜாக்மா மட்டுமே நிராகரிக்கப்பட்டார்.

ஜாக்மா இணையம் பற்றி அறிந்தப் பிறகு, "China Page" என்ற முதல் ஆன்லைன் telephone directory- ஐ தொடங்கினார். ஆனால் அந்த முயற்சியில் தோல்வி அடைந்து China page – லிருந்து வெளியேறினார்.

1998 – ல் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் வாங்குவோர்களை ஒன்று இணைக்கும் அலிபாபா என்ற நிறுவனத்தை தொடங்கினார். மூன்று ஆண்டுகள் வரை அலிபாபா எந்த லாபத்தையும் ஈட்டவில்லை. மேலும் எந்த வங்கியும் அலிபாபா நிறுவனத்துடன் சேர்ந்து வேலைச் செய்ய விரும்பவில்லை. எனவே ஜாக்மா "Alipay" என்ற சொந்த பண பரிவர்த்தனை செய்யும் நிறுவனத்தை தொடங்கினார். ஜாக்மா ஆன்லைன் பண பரிவர்த்தனை இணையத்தை தொடங்கிய போது அவரின் ஐடியா முட்டாள்தனமானது என்று கூறினார்கள். இன்று உலகம் முழுவதும் அதிகமான ஆன்லைன் பண பரிவர்த்தனைகள் Alipay மூலமே நடைபெறுகின்றன.

இவர், 2014 ஆம் ஆண்டு சீனாவின் முதல் பெரிய பணக்காரர் ஆவார். உலகில் 22 வது மிகவும் சக்தி வாய்ந்த மனிதர். சீனாவின் 80% ஆன்லைன் விற்பனை அலிபாபா குழுமம் மூலமே நடைபெறுகிறது. இதன் சந்தை மதிப்பு $.212 பில்லியன் டாலர். வருமானத்தின் அடிப்படையில் அலிபாபா உலகின் 6 – வது மிகப் பெரிய இணையத்தளம்.

ஜாக்மாவின் வெற்றிக்கான சில வழிகள்

1. புறக்கணிப்பை பயன்படுத்துங்கள்.
2. உங்கள் கனவை உயிர்ப்புடன் வைத்திருங்கள்.
3. குறை காணாதீர்கள், அதில் உள்ள வாய்ப்புகளை பாருங்கள்.
4. உங்கள் கனவு வெற்றியடையாது, முட்டாள்தனமானது என்று யார் கூறினாலும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.
5. உங்களை வளர்த்துக் கொள்ள கற்றுக் கொண்டே இருங்கள்.
6. ஏதேனும் ஒரு காரியங்களில் கவனத்தைக் குவியங்கள்.
7. உங்கள் கனவின் மீது தீராத வெறியை கொண்டிருங்கள்.
8. முதலில் வாடிக்கையாளர்கள் தான், இரண்டாவது ஊழியர்கள், மூன்றாவது தான் முதலீட்டாளர்கள்.
9. நிறுவனத்தின் மதிப்பை உருவாக்குதல், புதுமையை புகுத்துதல் கலாசாரத்தை உருவாக்குதல் போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள்.
10. உங்கள் நிறுவனத்திற்கு நல்ல பெயரைத் தேடுங்கள்.

**"IF YOU DON'T GIVE UP, YOU STILL HAVE CHANCE. GIVING UP IS THE GREATEST FAILURE.**

## கவிதைகள்

### தோற்பது தோல்வியே

தோற்று போகிறோம் என கவலை கொள்ளாதே...
சிறிய முயற்சியும், சிறிது பயற்சியும்
செய்யும் போது,
தோல்வி உன்னிடம் இருந்து
தோற்றுப் போகும்.
இந்த மண்ணிலிருந்து மாண்டு போகும் ...

### கோபம்

குடும்பங்களில் காட்டப்படும் எல்லா
கோபங்களுக்குப் பின்னாலும் ஒரு வித
அன்பு இருக்கிறது என்பதை மட்டும்
தெரிந்திட மறந்துவிடுகிறோம்.

*Collected From Internet.*

## ஹைக்கூ

### வாழ்க்கை

வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல...
நீ மற்றவர்கள் மனதில் வாழும் வரை...

*Collected From Internet.*

## சிந்தனைக்கு

1. யாருக்காகவும் உன்னை மாற்றி கொள்ளாதே. ஒரு வேளை மாற நினைத்தால், ஒவ்வொரு மனிதர்களுக்கும் நீ மாற வேண்டி வரும்.
2. பேசப்படும் சொல்லை விட எழுதப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது.
3. நல்லவனாய் இரு. ஆனால் அதை நீருபிக்க முயற்சி செய்யாதே. அதை விட முட்டாள்தனமான விஷயம் எதுவுமில்லை.
4. நம்பிக்கையுடன் நகர்ந்து கொண்டே இரு "நதி" போல...
ஒரு இடத்தில் வெற்றி காத்திருக்கும் "கடலாக".

*Collected From Internet*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து
கவிதைகள், கட்டுரைகள், கதைகள்
வரவேற்கப்படுகிறது.
- Editor

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி LXVII)

உலகம் என்பது கட்டங்களின் தொகுப்பு

இப்படிக் கட்டங்களைப் பிரித்த பிறகு, அந்தப் பகுதியினுள் எந்தெந்த இடங்களில் யார் யார் பணிபுரிகிறார்கள் என்ற விவரங்களைப் பெரிய புள்ளிகளின் வடிவில் குறிக்க வேண்டும். அதன் பின்னர், ஒவ்வொரு கட்டத்துக்குள்ளும் ஒரு புள்ளி இருக்கும் படியாக, கோடுகளைக் கொஞ்சம் முன்னே பின்னே நகர்த்தி அமைக்க வேண்டும்.

இந்த மாற்றங்களின் முடிவில், புள்ளிகள் இல்லாத கட்டங்கள் என்று எவையும் இருக்கக் கூடாது. ஒரே கட்டத்தினுள் இரண்டு புள்ளிகள் இருந்தால், அந்தக் கட்டத்தை இரண்டாகப் பிரித்து விட வேண்டும். முடிந்த வரை, ஒவ்வொரு கட்டத்துக்கும் ஒரே புள்ளி என்கிற விதிமுறையைப் பின்பற்ற வேண்டும்.

இப்போது நம் கையில் இருப்பது, சுத்தப்படுத்த வேண்டிய பிரதேசத்தின் 'செய்சோ' வரைபடம். இதிலிருக்கும் கட்டங்கள் ஒவ்வொன்றும், சுத்தப் பகுதிகள், மற்றும் அவற்றினுள் இருக்கும் புள்ளிகள் தான். அந்தப் பகுதிகளைச் சுத்தப்படுத்தப் போகிற பெரும் புள்ளிகள்.

அதாவது – மேலாளர், அதிகாரி, கண்காணிப்பாளர், ஊழியர் என்று எந்த வித்தியாசமும் பார்க்காமல் எல்லாப் புள்ளிகளுக்கும், தனித்தனி இடங்களை ஒதுக்கிக் கொடுத்து விடுகிறோம். அவரவர் தங்களுடைய கட்டங்களைச் சுத்தப்படுத்தி, குப்பைகளைப் பக்கத்து கட்டத்துக்குத் தள்ளிவிடாமல், அதற்கான தொட்டிகளில் முறைப்படி சேர்த்து விட வேண்டியது.

(தொடரும்)

## Electrolytic Scale Remover for Cooling Tower

